செ.வெ.எண்:12 நாள்:11.11.2020

# பத்திரிக்கைச் செய்தி.

இந்திய அரசு சுற்றுலா அமைச்சகம் புதிதாக தொடங்கியுள்ள விரிவான தேசிய ஒருங்கிணைந்த தரவு தளம் மூலம் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகைப்படுத்தப்பட்ட மற்றும் வகைப்படுத்தப்படாத சுற்றுலா தங்கும் விடுதிகளின் உரிமையாளர்கள் தங்களின் விடுதி விவரங்களை **www.nidhi.nic.in** மற்றும் **www.saathi.qcin.org** ஆகிய வலைதளங்களில் பதிவு செய்ய வேண்டும்.

மேலும், 'saathi' என்கிற இணையதளத்தில் பதிவு செய்யும் விடுதி உரிமையாளர்களுக்கு சுற்றுலா அமைச்சகம் இந்திய அரசு சுய சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இந்த நற்சான்று மூலம் தங்களின் வணிகத்தை வெகுவாக உயர்த்திக் கொள்ள முடியும். மேலும், சுற்றுலா அமைச்சகம் இந்திய அரசு வழங்கும் பயிற்சிகளில் தங்களின் விடுதி பணியாளர்களை பங்கு பெறச் செய்து பயன் பெறலாம்.

அவ்வாறு பதிவேற்றம் செய்யும் விவரங்களை **tntotnj@yahoo.in** / **ariyalurtourism@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும். எனவே, அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து தங்கும் விடுதி உரிமையாளர்கள் தமிழ்நாடு அரசு சுற்றுலா அலுவலகம், காந்திஜி சாலை, ஓட்டல் தமிழ்நாடு வளாகம், ஆற்றுப்பாலம் அருகில், தஞ்சாவூர் / அறை எண்.233, இரண்டாவது தளம், மாவட்ட ஆட்சியரகம், சுற்றுலா அலுவலகம், அரியலூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். மேலும், தொலைபேசி எண்.04362-230984, 04329-228450, 9176995873, 7397715685 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.இரா.ஜெய்னுலாப்தீன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**